மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

26—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

*1264—**திரு. ஆ. ராமசாமி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை தொகுதி, அழகம்பட்டியிலுள்ள ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அழகம்பட்டி கிராமத்தில் இயங்கிவரும் ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட பரிசீலித்து, நிதிநிலைமைக்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் தொகுதிக்குட்பட்ட சித்தேரி மலையில், கலசப்பாடி நடுநிலைப் பள்ளி ஏறக்குறைய 20 ஆண்டுக்காலமாகத் தரம் உயர்த்தப்படாமல் உள்ளது. அதில் 175 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். அவர்கள் உயர்நிலைப் பள்ளியில் கல்வி கற்க வேண்டுமென்று சொன்னால், சித்தேரிக்கு 12 கிலோ மீட்டர் தூரமும், வாச்சாத்திக்கு 9 கிலோ மீட்டர் தூரமும் நடந்தே*

2013 அக்டோபர் 25]

சென்று படிக்க வேண்டிய அவல நிலை இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில்கூட நான் இதுசம்பந்தமாக மனு கொடுத்திருக்கிறேன். எனவே, வரும் கல்வி ஆண்டிலாவது கலசப்பாடி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திடவும், மலையிலே இருக்கக்கூடிய பேரேரிப்புதூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திடவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? பழங்குடியின மாணவர்களின் கல்வியை உத்தரவாதப்படுத்துகின்ற வகையிலும், உறுதிப்படுத்துகின்ற வகையிலும் அது அமையும் என்பதையும் தங்கள்வாயிலாகத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்கள் அதிகமாகக் குடியிருக்கும் பகுதிகளில் அமைந்திருக்கும் ஆதி திராவிடர் நலப் பள்ளிகளின் தரத்தை உயர்த்துவதில் தமிழக அரசு முனைப்புடன் உள்ளது. இதுசம்பந்தமாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பாதுகாவலராகத் திகழும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று தேவைப்படும் இடங்களில் பள்ளிகளைத் தரம் உயர்த்திடத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. அருண் பாண்டியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

27—

புதிய பேருந்துகள்

***19998—திரு. செ. அருண் பாண்டியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி தொகுதி, பேராவூரணி பேருந்துப் பணிமனைக்கு புதிய பேருந்துகள் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?